This book is protected by copyright act. Please do not share this download with others.

இந்தப் புத்தகம் உரிமை பதிவு செய்யப்பட்டது. இதனை மற்றவருக்கு இணையம் மூலம் அனுப்புதல் கூடாது.

# எப்போதும் பெண்

www.writersujatha.com

அவள் எப்போதும் பெண் என்று நிர்ணயிக்கப்பட்டாள்?

சொல்வது கஷ்டம். சிருஷ்டியின் அல்லது பரிமாண தத்துவத்தின் மிக மிக தற்செயலான ஸ்டாடிஸ்டிக் விதிகளின்படி நிர்ணயிக்கப்பட்ட சங்கதி அது. அவள் பெண் என்று தீர்மானமாகும் அந்தக் கணம்வரை அது யாருக்கும் தெரியாது.

ஒரு நாள் இரவு கரண்டு நின்று போனதால் அப்பாவும் அம்மாவும் மொட்டை மாடிக்குப் போய்ப் படுத்துக்கொண்டிருந்தார்கள். குழந்தைகள் பாட்டியுடன் கீழே படுத்திருந்தன. அப்பாவும் அம்மாவும் இப்போது எல்லாம் சேர்ந்தே படுத்துக்கொள்வதில்லை. அப்பாவுக்கு நாற்பத்து ஐந்து வயது. அம்மாவுக்கு முப்பத்து ஏழு. இருபது வருஷ மண வாழ்க்கைக்கு அப்புறம் அவர்கள் இயல்பாக ஒருவரையொருவர் சரீரத் தேவையின்றி விலகிக் கொண்டார்கள். மூன்று குழந்தைகளும், பாட்டிகூட இருப்பதும். வீட்டின் குறுக்களவும் உபரிக் காரணங்கள். இதனால் அம்மா அப்பாவுக்கு அலுத்து விட்டாள் என்றில்லை.

அன்று ராத்திரி பவர் கட்டினால் மாடியில் படுத்துத் தூங்கிப் போய் விட்டார்கள். நடு ராத்திரி. சற்று தூரத்தில் ஓடிய குட்ஸ் வண்டியின் ஓசை கேட்டு அப்பா திடுக்கிட்டு விழித்தெழுந்தவர் வண்டியின் போய் பானையைச் சரித்து தண்ணீர் குடித்திவிட்டுத் திரும்பி வந்து படுத்துக்கொண்டார். ஒருமுறை அம்மாவைப் பார்த்தார். மல்லாக்க படுத்திருந்தாள். குடும்ப அவஸ்தைகளை மீறின அனாயாசமான அலட்சியமான அந்தச் சயனம் அப்பாவுக்கு சற்றுக் கிறக்கமாக இருந்தது. அவள் மேல் கையை வைத்துக்கொண்டு படுத்தார். அதற்கு மேல் அவருக்கு எந்த உத்தேசமும் இருக்கவில்லை. சற்று நேரம் அப்படியே படுத்திருந்தார். தூக்கம் வரவில்லை. திரும்பிப் படுத்துக்கொண்டு ‘கிட்ட வா’ என்று எழுப்பினார். அவள் அரைத்தூக்கத்தில் திரும்பிப் படுத்துக்கொள்ள அப்பா அம்மாவை அணைத்துக்கொண்டு இன்னும் கொஞ்சம் அணைத்துகொண்டு அன்னியோன்ய விதிகளை மீறினார்.

www.writersujatha.com

“வேண்டாம். எனக்குப் பயமாக இருக்கு.”

“ஒண்ணும் ஆகாது வா.”

“எனக்கு நாள் கணக்குத் தெரியல்லன்னா. வேண்டாம்.”

“கணக்குத் தப்பு.”

“தூக்கம் வரது.”

“நீ பாட்டுக்கு தூங்கு.”

“விடுங்கோ.”